# பச்சிளம் குழந்தைகளின் ஞானஸ்நானத்தைப் பற்றிய விஷயம் என்ன?

பச்சிளம் குழந்தைகள் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று நம்புபவர்களால் பின்வரும் கேள்விகள் அடிக்கடி கேட்கப்படுகின்றன.

***கேள்வி: பச்சிளம் குழந்தைகள் யாவரும் பாவத்தில் பிறக்கின்றனரா?***

பதில்: இல்லை. பாவம் நிறைந்த உலகில் இக்குழந்தைகள் பிறக்கின்றனர், ஆனால் இது அவர்களைப் பாவிகளாக்குவது இல்லை. ஒரு குழந்தை, தீவனக் களஞ்சியத்தில் பிறந்தால் அது அவனை ஒரு பசுவாக்கி விடுவதில்லை. சங். 51ல் தாவீது, "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்று எழுதினார் (வ. 5). இது இவ்வசனத்தின் சொல்லர்த்தமான மொழி பெயர்ப்பாக உள்ளது. இது தாவீதின் பிறப்பைச் சூழ்ந்துள்ள சூழ்நிலை களின் இயல்பைத் தருகின்றது, ஆனால் இது அவர் பாவியாகப் பிறந்தார் என்று குறிப்பிடுவதில்லை. வேதாகமத்தின் சில மொழிபெயர்ப்புகள்[1] எபிரெய வசனப் பகுதியைக் கவனித்து மதிக்காமல், தாவீது ஒரு பாவியாகப் பிறந்தார் என்று எழுதுகின்றன. இது துரதிர்ஷ்டவசமானதாக உள்ளது.

***கேள்வி: ஆதாமின் பாவக் குற்றத்தை ஒவ்வொரு நபரும் சுமக்கின்றனரா?***

பதில்: இல்லை. ஆதியாகமம், மரணம் (3:3, 19), பிள்ளைப் பிறப்பின் வேதனை (3:16), மற்றும் சபிக்கப்பட்ட ஒரு பூமி (3:17) முதலியவை பாவத்தின் விளைவுகளாகும் என்று கூறுகின்றது. ஆதாம் மற்றும் ஏவாளின் பாவத்தினுடைய விளைவுகளை நாம் அனுபவிக்கின்றோம், ஆனால் அவர்களின் குற்றத்தை நாம் சுதந்தரித்துக் கொள்வதில்லை. ஒழுக்க ரீதியான தேர்வுகளைச் செய்து கொள்ளும் திறன் நமக்கு உண்டு; தேவனுடைய வசனத்திற்கு இசைவாக தேர்வு செய்ய நாம் தவறுகின்ற பொழுது, நாம் பாவத்தின் குற்றமுள்ளவர்கள் ஆகின்றோம்.

***கேள்வி: குழந்தைகள் தேவனுடைய இராஜ்யத்திலிருந்து பிரிந்தவர் களாய்ப் பிறக்கின்றனரா?***

பதில்: இல்லை. "பரலோக இராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது"

*(மத். 14:19) என்று இயேசு கூறினார்.*

***கேள்வி: குழந்தைகள் தங்கள் பெற்றோரின் பாவங்களைச் சுமக்கின்றனரா?***

*பதில்: இல்லை. ''... குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதில்லை; நீதிமானுடைய நீதி அவன்மேல்தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்'' (எசே. 18:20). ஆகவே, ஒவ்வொரு நபருடைய நீதியும் அல்லது துன்மார்க்கமும் அவரவர் மேலேயே இருப்பதால், நியாயத்தீர்ப்பும் ஒவ்வொருவரும் செய்த செயல்களின் அடிப்படையிலேயே இருக்கும். ஒரு நபருடைய நீதியும் அல்லது துன்மார்க்கமும் இன்னொரு நபருக்குக் கணக்கிடப்படாது.*

***கேள்வி: நடபடிகளின் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 'வீட்டாரின் மனமாற்றங்கள்' பச்சிளம் குழந்தைகளை உள்ளடக்கு கின்றனவா?***

*பதில்: இல்லை, அவர்களில் ஒரு சில வீட்டாரே பச்சிளம் குழந்தை களைக் கொண்டிருந்தனர் என்பது ஏற்புடையதாயுள்ளது. "வீட்டார்'' எனப்படுவோர், "தேவனுக்குப் பயந்து" (அப். 10:2) மற்றும் "விசுவாசித்து" (அப். 16:34; 18:8) இருந்தனர் என்று கூறப்பட்டது. லீதியாளுக்குக் குழந்தைகளோ அல்லது கணவரோ இருந்ததாகச் சுட்டிக்காட்டுவது எதுவுமில்லை (அப். 16:14, 15). சிறு பிள்ளைகள் வீட்டாரிலிருந்து தனிப்பட்ட வகையில் கணக்கிடப்பட்டனர் (ஆதி. 47:24ஐக் காணவும்). பச்சிளம் குழந்தைகள் ஞானஸ்நானப் படுத்தப்பட்டதான உதாரணங்கள் வேதாகமத்தில் காணப்படுவதில்லை. இதற்கு மாறாக, அப். 8:12ன்படி, "ஆண்களும் பெண்களும்"* ("Men and Women") *ஞானஸ்நானம் பெற்றனர்.*

***கேள்வி: ஞானஸ்நானப்படுத்துதல் மூலம் பிள்ளைகள் தேவனுக்கு பிரதிஷ்டை பண்ணப்படுதல் அவசியமா?***

*பதில்: இல்லை. இயேசுவின் பிரசன்னத்தில் பிள்ளைகள் குற்றமறியாத நிலையில் ''பாதுகாப்புடன்'' உள்ளனர். அவர்கள் ஞானஸ்நானத்தில் தேவனுக்கு பிரதிஷ்டை பண்ணப்பட வேண்டும் என்று வற்புறுத்துவது மனித பாரம்பரியம் ஆகும். கிறிஸ்தவர்கள் இவ்வகையான மனித பாரம்பரியங்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் (கொலோ. 2:8).*

***கேள்வி: பழைய ஏற்பாட்டில் பச்சிளம் குழந்தைகள் விருத்தசேதனம் செய்யப்பட்டதால், பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது அவசியமல்லவா?***

*பதில்: இல்லை. இந்தச் சிந்தனை செல்லத் தக்கது என்றால், விருத்த சேதனமற்ற பிள்ளைகளைப் போலவே (ஆதி. 17:14), ஞானஸ்நானம் பெறாத ஒவ்வொரு குழந்தையும் தனது மக்களில் இருந்து அறுப்புண்டு*

போவதாயிருக்கும். பாவமன்னிப்புக்கென்றுள்ள ஞானஸ்நானம் (அப். 2:38), தேவனுக்கும் ஆபிரகாமுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கையின் அடையாளமாய் இருந்த விருத்தசேதனத்தின் அதே நோக்கத்தை நிறைவேற்றுவதில்லை (ஆதி. 17:11). ஞானஸ்நானம் பெறுகின்றவர்கள் செய்யும்படி தேவன் கேட்கின்றவைகளைப் பச்சிளம் குழந்தைகள் செய்ய முடியாது. ஞானஸ்நானம் பெறுகின்ற மக்கள் தங்களுக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதைக் கேட்டிருக்க வேண்டும். அவர்கள் சுவிசேஷத்தை விசுவாசிப்பவர்களாய் இருக்க வேண்டும் (மாற். 16:15, 16), மனந்திரும்ப வேண்டும் (அப். 2:38), மற்றும் ஒரு புது வாழ்வை வாழ வேண்டும் (ரோமர் 6:4). நடபடிகளில், வசனத்தைக் கேட்டு, ஏற்றுக் கொண்டு, விசுவாசித்து, மற்றும் மனந்திரும்பியவர்களே ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர் என்று கூறப்படுகின்றது (அப். 2:41; 8:12; 18:8). பச்சிளம் குழந்தைகளிடம் பாவம் எதுவுமில்லை, மற்றும் அவர்கள் (கேட்கப்படுபவற்றை) நிறைவேற்ற முடியாது, எனவே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக் கூடாது.

பச்சிளம் குழந்தையாக இருந்த வேளையில் ஞானஸ்நானம் பெற்ற ஒருவர், அந்தத் தொடக்க வயதில் தாம் கிறிஸ்தவராவதற்கு அவசியமான விசுவாசத்தைக் கொண்டிருந்திருக்க முடியாது என்பதை உணர்ந்தறிய வேண்டும். இயேசுவின் இரத்தம் நம்மை நமது பாவங்களில் இருந்து சுத்திகரிக்கின்றது (ரோமர் 3:25) என்பதை பச்சிளம் குழந்தை புரிந்து கொள்ள முடியாது; அது மனந்திரும்பவும், இயேசுவைப் பின்பற்றவும் தம் வாழ்வை அர்ப்பணிக்கவும் முடியாததாக உள்ளது (யோவா. 12:26). ஞானஸ்நானம் பெறுகின்ற ஒரு நபர் இயேசுவின் சீஷராவதற்குத் தம்மை ஒப்புவிக்கின்றார் (மத். 28:19). இப்படிப்பட்ட ஒப்புக்கொடுத்தல் எதையும் (தமது ஞானஸ்நானத்தின்போது) செய்திராதவர்கள் தாங்கள் மன்னிக்கப் படும்படியும் இயேசுவுக்காகப் புது வாழ்வொன்றை வாழும்படியும் இந்த விருப்ப நோக்குடன் ஞானஸ்நானம் பெற வேண்டும்.

***கேள்வி: பெற்றோர்களின் பாவங்களினால் அவர்களின் பிள்ளைகள் மேல் குற்றம் சுமருகின்றதா?***

பதில்: இல்லை. பெற்றோரின் பாவத்தினால் அவர்களின் பிள்ளைகள் துன்புறலாம் (யாத். 20:5). இருப்பினும், தேவன், "... தம்மில் அன்புகூர்ந்து, தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறை மட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன்" (உபா. 7:9ஆ) என்றுள்ளார்.

---

குறிப்பு

[1]இந்த கேள்விக்கான மொழிபெயர்ப்பு NIV, NRSV மற்றும் புதிய எருசலேம் வேதாகமத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.